28 DEC 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க,

## நிதிச் சட்டம்

---

(1995, ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1995, செத்தெம்பர் மாதம் 01ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 2.55

# 1995 ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க, நிதிச் சட்டம்

[1995, ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 6/95

1995 சனவரி 1 ஆம் திகதியன்று தொடங்கும் நிதியாண்டிற்கு நிதி சார்ந்தவையும் வேறுவகையானவையுமான குறித்த சில பிரேரணைகளுக்கு சட்டவலு அளிப்பதற்கு அவசியமான சட்ட ஏற்பாடுகளை ஆக்குவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். கருக்கப்பெயர்.

## அத்தியாயம் 1

### பாகம் I

### டீசல் மோட்டார் வாகன விதிப்பனவைச் சுமத்துதல்

டீசல் மோட்டார் வாகன ஆண்டு விதிப்பனவு.

2. டீசல் மோட்டார் வாகனம் ஒவ்வொன்றுக்கும் 1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும் பத்தாயிரம் ரூபாவுக்குச் சமமான பணத்தொகையொன்று அறவிடப்படுதலும் வேண்டும். (இது இப்பாகத்தில் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தற்பாலதான விதிப்பனவு டீசல் மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஆயினும், டீசல் மோட்டார் வாகனம் ஒன்று ஏதேனும ஆண்டில் சிறுவர்களை பாடசாலைகளுக்கும் பாடசாலைகளிலிருந்தும் அல்லது அலுவலக பணியாட்டொகுதியினரை அலுவலகங்களுக்கும் அலுவலகங்களிலிருந்தும் அல்லது வேலைத்தலங்களுக்கும் வேலைத்தலங்களிலிருந்தும் அல்லது பொருட்களை ஏற்றிச் செல்வதற்கு பயன்படுத்தப்படுவதாக இவ்வத்தியாயத்தின்கீழ் ஆணையாளரால் பதிவுசெய்யப்படுமிடத்து, அத்தகைய டீசல் மோட்டார் வாகனத்தின்மீது செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு ஐயாயிரம் ரூபாவாதல் வேண்டும்.

### பாகம் II

### ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவு, ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவு மற்றும் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவு ஒன்றைச் சுமத்துதல்.

ஆடம்பர மோட்டார் வாகன ஆண்டு விதிப்பனவு.

3. (ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனமொன்றைத் தவிர) ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும் 1995 ஏப்பிரல் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல் இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் காணப்பட்டுள்ள அத்தந்த வீதப்படி ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவொன்று அறவிடப்படுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். (இது இப்பிரிவில் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்). ஒவ்வோராண்டிற்கும்

2—டீ 036686—1,270 (95/07)

செலுத்தப்படற்பாலதான அத்தகைய விதிப்பனவு ஆடம்பர மோட்டார் வாகனச் சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன ஆண்டு விதிப்பனவு.

4. ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின்மீதும் 1995 ஏப்ரில் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும், ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல், இச் சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அந்தந்த வீதப்படி ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவொன்று அறவிடப்படுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். (இது இப்பிரிவில் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன ஆண்டு விதிப்பனவு.

5. ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் ஒவ்வொன்றின் மீதும் 1995 ஏப்ரில் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஒவ்வோராண்டிற்கும் ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு மேற்படாமல், இச்சட்டத்திற்கான மூன்றாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள அந்தந்த வீதப்படி ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவொன்று அறவிடப்படுதலும் விதிக்கப்படுதலும் செலுத்தப்படுதலும் வேண்டும். (இது இதனகத்துப்பின்னர் "விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.) அத்தகைய ஒவ்வோராண்டிற்கும் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனச் சொந்தக்காரரால் இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும்.

## பாகம் III
## விதிப்பனவைத் திரட்டுதல்

விதிப்பனவானது டீசல் மோட்டார் வாகன விதிப்பனவையும் ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவையும் உள்ளடக்கும்.

6. இவ்வத்தியாயத்தின் இப்பாகத்தின் நோக்கங்களுக்காக "விதிப்பனவு" என்பது டீசல் மோட்டார் வாகன விதிப்பனவையும் ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகன விதிப்பனவையும் அத்துடன் அதனுடன் சேர்க்கப்படும் ஏதேனும் தண்டப் பணத்தையும் உள்ளடக்கும்.

பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் விதிப்பனவைச் செலுத்த வேண்டும் என்பது.

7. குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒவ்வொன்றினதும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய 1995 ஏப்ரில் 1ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் ஆண்டிற்கு அவரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவை இயைபான திகதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆணையாளருக்குச் செலுத்த வேண்டும்.

காப்பீட்டு தாரர் விதிப்பனவைத் திரட்டுதல் வேண்டும் என்பது.

8. (1) ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில் காப்புறுதி செய்யும் அல்லது காப்புறுதிப் பத்திரமொன்றைப் புதுப்பிக்கும் காப்பீட்டுதாரர் ஒவ்வொருவரும் —

(அ) குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்று தொடர்பில் அவர் காப்புறுதிசெய்கின்ற அல்லது காப்புறுதிப் பத்திரமொன்றைப் புதுப்பிக்கின்ற நேரத்தில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனத்தின்மீது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவிற்குச் சமமான தொகையொன்றை அத்தகைய வாகனத்தின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து திரட்டுதல் வேண்டும்;

(ஆ) அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை, அத்தொகை திரட்டப்பட்ட மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர், ஆணையாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அத்தகைய விவரங்கள் அடங்கிய வெளிப்படுத்துகையொன்றுடன் ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஏதேனும் தொகையைத் திரட்டுகின்ற காப்பீட்டுதாரர் ஒவ்வொருவரும் அவ்வாறு திரட்டப்பட்ட தொகை திரட்டப்பட்டமையை ஆணையாளரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் முறையாக நூட்பெறல் வேண்டும்.

(3) எவரேனும் காப்பீட்டுதாரரால் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் எவரேனும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து திரட்டப்பட்ட ஏதேனும் தொகையானது, அத்தகைய காப்பீட்டுதாரர் அத்தகைய தொகையைத் திரட்டிய திகதியன்று அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரால் ஆணையாளருக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) வேறு ஏதேனும் சட்டத்தில் ஏது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் எவரேனும் காப்பீட்டுதாரரால் திரட்டப்பட்டு ஆணையாளருக்கு அனுப்பப்படுவதற்கென அத்தகைய காப்பீட்டுதாரரால் வைத்திருக்கப்படும் ஏதேனும் தொகையானது, அத்தகைய காப்பீட்டுதாரரின் தொழில் வங்கி முறியம் விடயத்தில் எடுக்கப்

படும் விடயத்தில் அல்லது கலைக்கப்படும் விடயத்தில் நிறைவேற்றுகைக்கு அல்லது நிருவாகத்திற்கு அல்லது கடன்தருநர்களின் நலனுக்காக ஒப்படைத்தலுக்குப் பொறுப்பாகின்றவாறான அத்தகைய காப்பீட்டுதாரரின் அத்தகைய ஆதனமாகக் கருதப்படுதலாகாது என்பதுடன் அத்தகைய தொகையானது, அத்தகைய காப்பீட்டுதாரரின் வங்கி முறிவுறுவுள்ள, ஒடுக்குதலிலுள்ள அல்லது சாட்டுதலிலுள்ள மரணச் சொத்தினின்று வேறானதாகவும் அதன் பாகமாக அமையாததாகவும் இருத்தல் வேண்டும்.

(5) காப்பீட்டுதாரர் எவரும் குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் சொந்தக்காரரிடமிருந்து, இச்சட்டத்தின்கீழ் அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரரிடமிருந்து திரட்டப்பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட விதிப்பனவை திரட்டத் தவறுகின்றவிடத்து அல்லது காப்பீட்டுதாரர் எவரும் அத்தகைய தொகையைத் திரட்டியிருந்து அவ்வாறு திரட்டப்பட்ட தொகையை அத்தகைய தொகை திரட்டப்பட்ட மாதத்தை உடனடுத்துவரும் மாதத்தின் பதினைந்தாம் நாளன்று அல்லது அதற்குமுன்னர் ஆணையாளருக்கு அனுப்பியிராதவிடத்து, அத்தகைய காப்பீட்டுதாரர், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திரட்டுமாறு அவர் தேவைப்படுத்தப்பட்ட ஆளால் திரட்டியிராத தொகைக்கு, அல்லது விடயத்திற்கேற்ப, திரட்டப்பட்டதும் ஆணையாளருக்கு அனுப்பப்படாததும் அத்தகைய தொகைக்கும் அல்லது அதன் பாகத்திற்கும் அத்துடன் விடயத்திற்கேற்ப திரட்டப்படாததும் அல்லது திரட்டப்பட்டு அனுப்பப்படாததுமான அத்தகைய தொகைக்குப் பொறுப்பாதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய தொகை ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருக்க வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட தினத்தையடுத்த தினத்திலிருந்து தவறுகையில் உள்ளதாகக் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய காப்பீட்டுதாரர் அத்தகைய திகதியிலிருந்து இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் தவறாளரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(6) காப்பீட்டுதாரர் எவரும் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தவறாளரொருவராகக் கருதப்படுமிடத்து, தவறுகையிலுள்ள விதிப்பனவின் தொகை, 10 ஆம் பிரிவிலும் 11 ஆம் பிரிவிலும் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் அத்தகைய தவறாளரிடமிருந்து அறவிடப்படலாம்.

*பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் விதிப்பனவின் கொடுப்பனவை எண்பித்தல் வேண்டும் என்பது.*

9. குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒவ்வொன்றினதும் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், ஏதேனும் ஆண்டிற்கு அத்தகைய மோட்டார் வாகனம் தொடர்பில் காப்புறுதிப்பத்திரமொன்றின் வழங்கீட்டிற்கென அல்லது புதுப்பித்தலுக்கென காப்பீட்டுதாரருக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில், அவ்வாண்டிற்குக் குறித்துரைக்கப்பட்ட அம் மோட்டார் வாகனம் தொடர்பில் விதிப்பனவின் கொடுப்பனவுக்கான எண்பிப்பை முன்வைத்தல் வேண்டும்.

*தவறுனருக்கு அறிவித்தல்.*

10. (1) குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரரால் 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் ஆண்டிற்குச் செலுத்தப்படற்பாலதான விதிப்பனவு இயைபான திகதியன்று அல்லது அதன்முன் அவரால் செலுத்தப்படாதவிடத்து விதிப்பனவு தவணை தவறுகையில் உள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சொந்தக்காரர் அத்தகைய திகதியிலிருந்து தவறாளரொருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

(2) விதிப்பனவு எதுவும் உட்பிரிவு (1) நடைமுறையிலிருப்பதன் காரணமாக தவணை தவறுகையிலிருப்பதாகக் கருதப்படுமிடத்து, தவறாளர் விதிப்பனவிற்கு மேலதிகமாக விதிப்பனவு ஐம்பது சதவீதத்திற்குச் சமமான தொகையொன்றின் தண்டப்பணமொன்றைச் செலுத்துவதற்காளாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் விதிப்பனவு தவணை தவறுகையிலிருக்குமிடத்து, ஆணையாளர், 11 ஆம் பிரிவில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அத்தகைய விதிப்பனவை அறவிட முற்படுவதற்கு முன்னர் எழுத்திலான அறிவித்தல் மூலம் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் தவணை தவறுகையிலுள்ள விதிப்பனவைச் செலுத்துமாறு தவறாளரைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) அறிவித்தலொன்று பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரருக்கு நேரடியாக சேர்ப்பிக்கப்பட்டால் அல்லது அவ்வாகனத்தின் பதிவுச் சான்றிதழில் தரப்பட்டுள்ள முகவரியில் அவருக்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்பட்டால் அத்தகைய அறிவித்தல் அவருக்கு முறையாகச் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட அறிவித்தலொன்றின் விடயத்தில், அறிவித்தலானது, அது சாதாரணமாக அவருக்கு ஒப்படைக்கப்படும் திகதியன்று தவறாளரால் பெறப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

11. பத்தாம் பிரிவின்கீழ் அனுப்பப்படும் அறிவித்தலொன்றில் குறிப்பீடு செய்யப்பட்டிருக்கும் திகதி முடிவடையுமுன்னர் விதிப்பனவுத் தொகை செலுத்தப்பட்டிருக்காதவிடத்து, ஆணையாளர், அத்தகைய விதிப்பனவுத் தொகையையும் அத்தகைய விதிப்பனவைச் செலுத்துவதற்குத் தவறியுள்ள பதிவுசெய்யப்பட்ட சொத்தக்காரரின் பெயரையும் அவர் கடைசியாக வசித்த இடத்தையும் கொண்டிருக்கும் சான்றிதழொன்றை, அத்தகைய இடம் எப்பிரிவுக்குள் அமைந்துள்ளதோ அப்பிரிவின்மீது நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிவான் ஒருவருக்கு வழங்கலாம். நீதிவான் அதன்மேல், விதிப்பனவை அறவிடுவதற்கு தவறுகை புரிந்தவருக்கு எதிராக ஏன் மேலும் வழக்கு நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடாதென்பதற்கான காரணம் காட்டுவதற்காகத் தம்முன் தோன்றுமாறு அத்தகைய தவறுகை புரிந்தவரை அழைத்தல் வேண்டும். அத்துடன், போதுமான அளவு காரணம் காட்டத் தவறுகின்றவிடத்து, செலுத்துவதிற் தவறுகை புரியப்பட்டிருக்கும் விதிப்பனவானது, மறியற்றண்டனையினால் தண்டிக்கப்படற்பாலதல்லாத, குற்றப்பணத்தினால் மட்டுமே தண்டிக்கப்படற்பாலதான தவறொன்றுக்கு அத்தகைய தவறுகை புரிந்தவர்மீது நீதிவானின் தண்டனை விதிப்பொன்றின்மூலம் சுமத்தப்பட்ட குற்றப்பணமொன்று என்றாற்போன்று கருதப்படுதல் வேண்டும். அத்துடன், அத்தகைய தவறொன்றுக்குச் சுமத்தப்படும் குற்றப்பணமொன்றின் கொடுப்பனவில் தவறுகை புரிதல் தொடர்பிலான 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 291 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் (அதன் (அ), (ஈ) அத்துடன்

விதிப்பனவை அறவிடு செய்தல்.

(i) என்னும் பந்திகள் தவிர), அதன்மேல் ஏற்புடையனவாதல் வேண்டும் என்பதுடன், நீதிவான், அவ்வுட்பிரிவின் ஏற்பாடுகள் மூலம் அத்தகைய தண்டனை விதிக்கின்றபோது செய்திருக்கக்கூடிய ஏதேனும் பணிப்புரையை ஆக்கலாம்.

## பாகம் IV

## தானவிதம்

டீசல் மோட்டார் வாகனம் பதிவு செய்தல்.

12. (1) டீசல் மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஒருவர், அவ்வாகனம் ஆறு பேர்களுக்குக் குறையாத எண்ணிக்கை கொண்ட பிள்ளைகளைப் பள்ளிகூடங்களுக்கும் பள்ளிக்கூடங்களிலிருந்தும் அல்லது ஆறு பேர்களுக்குக் குறையாத எண்ணிக்கை கொண்ட அலுவலகப் பணியாட்டொகுதியினரை அலுவலகங்களுக்கும் அலுவலகங்களிலிருந்தும் அல்லது வேலைத்தலங்களுக்கும் வேலைத்தலங்களிலிருந்தும் கொண்டு செல்வதற்கு அல்லது பண்டங்கள் கொண்டு செல்வதற்குக் கிரமமாகப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு வாகனமாக அத்தகைய வாகனத்தைப் பதிவுசெய்யும் நோக்கத்துக்காக ஆணையாளருக்கு விண்ணப்பமொன்று செய்யலாம். அத்தகைய வாகனம் எதுவும் அத்தகைய நோக்கத்துக்காகக் கிரமமாகப் பயன்படுத்தப்படவிருக்கிறது. அத்துடன் விடயத்துக்கேற்றவாறு அத்தகைய வாகனத்தில் கொண்டுசெல்லப்படவிருக்கும் பிள்ளைகளின் அல்லது அலுவலர்களின் எண்ணிக்கை பற்றிய வெளிப்படுத்துகையொன்று அதனோடு இணைக்கப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்ட விண்ணப்பமும் வெளிப்படுத்துகையும் கிடைக்கப்பெற்று அதில் செய்யப்பட்டுள்ள உறுதிக்கூற்றுக்களின் உண்மைத் தன்மையில் திருப்தியுற்றதன்மேல், ஆணையாளர், விண்ணப்பம் எவ்வாண்டு தொடர்பில் செய்யப்படுகிறதோ, அவ்வாண்டின்போது விண்ணப்பத்தில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள நோக்கத்துக்காகக் கிரமமாகப் பயன்படுத்தப்படும் வாகனம் என அத்தகைய வாகனத்தைப் பதிவு செய்தல் வேண்டும்.

(3) டீசல் மோட்டார் வாகனமொன்றின் பதிவு செய்யப்பட்ட சொந்தக்காரர் (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவரினால் செய்யப்பட்ட விண்ணப்பம் அல்லது வெளிப்படுத்துகை எதிலும் பொய்யான சரியில்லாத கூற்றொன்றைச் செய்திருக்கிறார் என அல்லது அத்தகைய டீசல் மோட்டார் வாகனமானது, அது எந்நோக்கத்துக்காகப் பதிவு செய்யப்பட்டதோ அந்நோக்கத்துக்காகப் பயன்படுத்தப்படவில்லையென ஆணையாளர் காணுகின்றவிடத்து, அவர், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் தம்பக்க உரையை எடுத்தியம்ப அவருக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்த பின்னர், (2) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய டீசல்மோட்டார் வாகனம் தொடர்பில் வழங்கப்பட்ட பதிவை இல்லாதாக்கலாம். அத்தகைய இல்லாதாக்கல் ஒவ்வொன்றும், அத்தகைய பதிவானது, எவ்வாண்டு தொடர்பில் செய்யப்பட்டதோ, அவ்வாண்டு தொடங்கும் திகதியிலிருந்து பயனுறுதல் வேண்டும்.

13. (1) அமைச்சர், விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்குவிதிகள்.

(2) ஈராம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்படும் திகதியலறு அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியன்று வலுவுக்கு வருதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒழுங்குவிதி கசெற்றில் வெளியிடப்படும் திகதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியொன்றுக்குள் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதலும் வேண்டும், அல்லது அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றக் கூட்டம் எதுவும் நடத்தப்படாவிட்டால், அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் நடாத்தப்படும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டத்தில், அத்தகைய ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென்ற பிரேரணை ஒன்றின்மூலம் பாராளுமன்றத்தின்முன் கொணரப்படுதல் வேண்டும். அத்தகைய பிரேரணையொவ்வொன்றிற்குமான அட்டவணையில், பிரேரணை எவ்வொழுங்குவிதி பற்றிக் குறிப்பீடு செய்கின்றதோ அவ்வொழுங்குவிதியின் உரையமைப்புத் தரப்பட்டிருத்தல் வேண்டும்.

(3) அங்கீகரிப்பதற்குப் பாராளுமன்றம் மறுக்கின்ற (1) ஆம் உட்பிரிவின்கீழான ஒழுங்குவிதி எதுவும், அத்தகைய மறுப்புத் தெரிவிக்கப்பட்ட திகதியிலிருந்து அதன்கீழ் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதி எதுவும் எத்திகதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ, அத்திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

14. இவ்வத்தியாயத்தின் ஏற்பாடுகள், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் ஏதேனும் பிறநாட்டு அரசாங்கமாக அல்லது ஐக்கிய நாடுகள் சபையாக அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களாக அல்லது ஏதேனும் பிறநாட்டு அரசாங்கத்தின் இலங்கையிலுள்ள இலங்கைப் பிரஜை ஒருவர் அல்லாத பிரதிநிதியாக (அவர் எத்தன்மைத்தான எப்பெயர், எப்பண்புப்பெயர் அல்லது பதவிப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலுஞ்சரி), அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களின் பிரதிநிதியாக அல்லது அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களின் இலங்கையிலுள்ள வியாபார ஆணையாளராக அல்லது காவற்றூது அலுவலராக அல்லது, அத்தகைய ஏதேனும் பிரதிநிதியின் பணியாட்டொகுதியில் இருக்கின்ற ஆள் எவரும் இலங்கைப் பிரஜையொருவராக இல்லாதிருக்கின்ற அல்லது அத்தகைய ஏதேனும் பிறநாட்டின் அத்தகைய ஏதேனும் அரசாங்கத்தின் அல்லது ஐக்கிய நாடுகள் சபையின் அல்லது அதன் எவையேனும் முகவர் நிலையங்களின் அல்லது ஏதேனும் குறித்துரைக்கப்பட்டுள்ள சர்வதேச ஒழுங்கமைப்பின் ஆணையாளராக அல்லது காவற்றூது அலுவலராக அல்லது அதன் இலங்கைப் பிரஜையொருவராக இல்லாதிருக்கின்ற பிரதிநிதியாக இருக்கின்றவிடத்து, ஏற்புடையனவாதல் ஆகாது. விலக்களிப்புகள்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, குறித்துரைக்கப்பட்ட ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பு என்பது, கசெற்றில் வெளியிடப்படும் அறிவித்தல்மூலம் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரினால் அவ்வாறு குறித்துரைக்கப்படும் ஒழுங்கமைப்பு ஒன்று ஆகும்.

நிருவாகம்.

15. இச்சட்டத்தின் நிருவாகத்துக்கு ஆணையாளர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

நிலுவையிலுள்ள ஏற்பாடுகள்.

16. குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் அத்தகைய மோட்டார் வாகனம் தொடர்பில் விதிப்பனவொன்றை 1995, ஏப்ரில் 1 ஆம் திகதியன்றோ அல்லது அதற்குப் பின்னரோ ஆனால் இச்சட்டம் தொடங்கும் திகதிக்குமுன்னர் செலுத்துமாறு தேவைப்படுத்தப்படுகின்றவிடத்து, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர் இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் ஆணையாளருக்கு விதிப்பனவைச் செலுத்தினால், அவர், எல்லா நோக்கங்களுக்காகவும் அத்தகைய தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகிவிட்டார். எனக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய விதிப்பனவு எதுவும் அவ்வாறு செலுத்தப்படாதவிடத்து, இச்சட்டம் தொடங்கிய திகதியிலிருந்து மூன்றுமாத காலப்பகுதியொன்று முடிவடைந்தபின்னர் அத்தகைய விதிப்பனவு தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளது எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட சொந்தக்காரர், இச்சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அத்தகைய திகதியிலிருந்து தவறுகை புரிந்த ஒருவராகக் கருதப்படுதலும் வேண்டும்.

பொருள்கோடல்.

17. இச்சட்டத்தின் இவ்வத்தியாயத்தில், சந்தர்ப்பம் வேறுவகையில் தேவைப்படுத்தினாலொழிய —

"ஆணையாளர்" என்பது, மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் எனப் பொருள்படும்;

"டீசல் மோட்டார் வாகனம்" என்பது, டீசலைப் பயன்படுத்துகின்ற அல்லது டீசலைப் பயன்படுத்தக்கூடியவாறு இசைவாக்கப்பட்ட வாகனம் எனப் பொருள்படும்;

"காப்புறுதி செய்பவர்" என்பது, 1993 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 16 ஆம் திகதிய, 754/7 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் பகிரங்க கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்துக்குச் சொந்தமான தொழில் பொறுப்பு முயற்சிகளை 1987 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்கப் பகிரங்கக் கம்பெனிகளாக மாற்றும் சட்டத்தின்கீழ் பகிரங்கக்கம்பெனி ஒன்றாகக் கூட்டிணைக்கப்பட்ட இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது 1979 ஆம் ஆண்டின் 22ஆம் இலக்கக் காப்புறுதியின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் தாபிக்கப்பட்ட சுதந்திரமான

கூட்டுத்தாபனம் அல்லது காப்புறுதித் தொழிலைச் செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதென 1962 ஆம் ஆண்டின் 25ஆம் இலக்கக் காப்புறுதிச் சட்டத்தின் கட்டுப்பாட்டின்கீழ் ஏதேனும் கம்பெனி எனப் பொருள்படும்;

"தரை வாகனம்" என்பது, எந்நிலப்பகுதியிலும் பயன்படுத்தப்படக் கூடியவாறு சரிசெய்யப்பட்டதும் வாகனத்தின் மாதிரியும் சிலிண்டர் திறனளவும் விதித்துரைக்கப்பட்டுள்ளனவுமான ஏதேனும் மோட்டார் வாகனம் எனப் பொருள்படும்;

"ஆடம்பர மோட்டார் வாகனம்" என்பது, தரை வாகனம் ஒன்று தவிர்ந்த எந்த டீசல் மோட்டார் வாகனத்தின் சிலிண்டர் திறன் அளவு 2500 க. செ. மீ.ஐ விஞ்சுகின்றதோ அந்த டீசல் மோட்டார் வாகனம் அல்லது அந்தப் பெற்றோல் மோட்டார் வாகனத்தின் திறன் அளவு 2000 க. செ. மீ.ஐ விஞ்சுகிறதோ அந்தப் பெற்றோல் மோட்டார் வாகனம் எனப் பொருள்படும்;

"அமைச்சர்" என்பது, போக்குவரத்து என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சர் எனப் பொருள்படும் ;

"மோட்டார் சைக்கிள்", "மோட்டார் ட்ரை சைக்கிள்", "மோட்டார் நோயாளர் வண்டி", "மோட்டார் பிரேத வண்டி" மற்றும் வலுவற்றோர் வண்டி" என்பனவற்றுக்கு, மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தில் குறித்தொதுக்கப்பட்டுள்ள அவ்வவற்றுக்குரிய பொருள் உண்டு ;

"மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் சைக்கிள், மோட்டார் ட்ரை சைக்கிள், மோட்டார் நோயாளர் வண்டி, மோட்டார் பிரேத வண்டி, வலுவற்றோர் வண்டி, லொறி, உழவு இயந்திரம் அல்லது கை உழவு இயந்திரம் அல்லாததும் ஒன்பது பேர்களுக்கு மேற்படாத மூன்று பேர்களுக்குக் குறையாததுமான ஆட்களையும் (சாரதி உட்பட) அவர்களது பொருட்களையும் ஏற்றிச் செல்வதற்கென நிர்மாணிக்கப்பட்டு அல்லது இசைவாக்கப்பட்டு இயந்திரத்தினால் உந்தப்படும் வாகனம் எதுவும் எனப் பொருள்படும்;

"பெற்றோல் மோட்டார் வாகனம்" என்பது, மோட்டார் வாகனப் போக்குவரத்துச் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டது எனப் பொருள்படும்;

"இயைபான திகதி" என்பது,

(அ) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு எப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பில், அத்துடன் அது எவ்வாண்டில் பதிவு செய்யப்பட்டதோ அவ்வாண்டு தொடர்பில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்ட திகதி எனப் பொருள்படும்;

(ஆ) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வாகனம் தொடர்பில் அத்துடன், அது எவ்வாண்டில் பதிவு செய்யப்பட்டதோ அவ்வாண்டுக்குப் பின்வரும் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட வாகனம் தொடர்பில், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் எத்திகதியன்று பதிவுசெய்யப்பட்டதோ, அத்திகதியோடு நேரொத்திருக்கும் அத்தகைய பின்வரும் ஆண்டிலான திகதி என அல்லது அத்தகைய பின்வரும் ஆண்டில் நேரொத்த திகதி எதுவும் இல்லாதிருக்கின்றவிடத்து, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் எத்திகதியன்று பதிவுசெய்யப்பட்டதோ, அத்திகதியோடு நேரொத்ததானதும் அத்தகைய பின்வரும் ஆண்டில் உள்ளதுமான திகதி எனப் பொருள்படும் ;

(இ) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்றுக்கு முன்னரும், 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னரான ஏதேனும் ஆண்டின் பதிவு செய்யப்பட்டதான குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்று தொடர்பில் எந்தத் திகதியன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டிலான அந்தத் திகதிக்கு நேரொத்த திகதி என்றும், அத்தகைய ஆண்டில் நேரொத்த திகதி இல்லாவிடத்து, எந்தத் திகதியன்று அத்தகைய குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டிலான அந்தத் திகதிக்கு அடுத்துவரும் திகதிக்கு நேரொத்த திகதி என்றும் பொருள்படும்.

"ஓரளவு ஆடம்பரமான இரட்டை நோக்கு மோட்டார் வாகனம்" என்பது இரட்டை நோக்க மோட்டார் வாகனம் எனப் பதிவு செய்யப்பட்டதான ஓர் ஆடம்பர மோட்டார் வாகனம் என்று பொருள்படும் ;

"ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம்" என்பது 2,200 க. செ. மீற்றருக்கு மேற்பட்ட ஆனால் 2500 க. செ. மீற்றருக்கு மேற்படாத சிலிண்டர் திறனளவைக் கொண்ட டீசல் மோட்டார் வாகனம் அல்லது 1,800 க. செ. மீற்றருக்கு மேற்பட்ட ஆனால் 2,000 க. செ. மீற்றருக்கு மேற்படாத சிலிண்டர் திறனளவு கொண்ட பெற்றோல் மோட்டார் வாகனம் எனப்பொருள்படுமென்பதுடன் நில வாகனமொன்றையும் உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

"குறித்துரைக்கப்பட்ட மோட்டார் வாகனம்" என்பது ஏதேனும் மோட்டார் வாகனம், ஏதேனும் ஆடம்பர மோட்டார் வாகனம், ஏதேனும் ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் அல்லது ஏதேனும் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் என்று பொருள்படும் ;

"ஆண்டு" என்பது, ஏதேனும் ஆண்டில் ஏப்ரில் 1 ஆம் திகதி தொடங்கி அடுத்து வரும் ஆண்டு மார்ச் 31 ஆம் திகதிவரையிலுமான பன்னிரண்டுமாதக் காலப்பகுதி என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

### புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் புடைவைகள், புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீதிலான தீர்வை விதிப்பனவும் சேகரிப்பும்

18. புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் புடைவைகள், புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன ஒவ்வொன்றின் மீதும் 1995, ஏப்ரில் 1ஆம் திகதியிலிருந்து இச்சட்டத்திற்கான நான்காம் அட்டவணையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறான அத்தகைய வீதங்களிலான தீர்வைபொன்று விதிக்கப்பட்டு அறவிடப்பட்டு அத்துடன் செலுத்தப்படுதலும் வேண்டும். புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் புடைவைகள், புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீதிலான தீர்வை அறவீடு.

19. (1) பதினெட்டாம் பிரிவின்கீழ் புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல் ஒன்றின்கீழ் ஏற்றுமதி செய்யப்படும் ஏதேனும் புடைவை அல்லது புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீது செலுத்தப்பட்டற்பாலதான தீர்வை எந்தப் பதிவுசெய்த ஏற்றுமதியாளருக்கு அத்தகைய புடைவைப் பங்குக் குறித்தொதுக்கலானது வழங்கப்பட்டுள்ளதோ அந்தப் பதிவுசெய்த ஏற்றுமதியாளரால், இயைபான அதிகாரிக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். அத்தகைய புடைவை அல்லது புடைவை உற்பத்திப் பொருள் ஏற்றுமதிசெய்யப்பட்ட பின்பும் தீர்வையானது பதிவுசெய்த ஏற்றுமதியாளரால், அத்துடன் அவர் அத்தகைய ஏற்றுமதியானது புடைவைப் பங்குக் குறித்தொதுக்கலொன்றின் கீழானது என்பதை எண்பிப்பதற்கான ஏற்றுமதி உரிமமொன்றிற்கு அல்லது வேறு ஆவணப்படுத்துகைக்கு விண்ணப்பிக்கும் நேரத்திலும் செலுத்தப்படலாம். இயைபான அதிகாரிக்குத் தீர்வை செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) இயைபான அதிகாரியானவர் அதிகாரசபையினால் குறித்துரைக்கப்பட்ட விதத்தில் இச்சட்டத்தின்கீழ் அவரால் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாத் தீர்வைகளையும் பெற்றுக்கொண்டமை பற்றி அறிவித்தல் வேண்டும்.

20. பதிவுசெய்த ஏற்றுமதியாளரான, 18 ஆம் பிரிவின்கீழ் செலுத்துவதற்குரித்தான ஏதேனும் தீர்வையை 19 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட உரிமத்திற்கு அல்லது ஆவணப்படுத்துகைக்கு விண்ணப்பிக்கும் நேரத்தில் செலுத்துவதற்குத் தவறுகின்றவிடத்து அல்லது மறுக்கின்றவிடத்து, இயைபான அதிகாரி அத்தகைய உரிமத்தை அல்லது வேறு ஆவணப்படுத்துகையை அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளருக்கு வழங்க மறுப்பதும், புடைவைப் பங்குச் சபை அத்தகைய பதிவுபெற்ற ஏற்றுமதியாளருக்கு வழங்கிய அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதான ஏதேனும் புடைவைப் பங்குக் குறித்தொதுக்கலையும் இல்லாதாக்குவதும் சட்டமுறையானதாதல் வேண்டும். தீர்வைக் கொடுப்பனவு தவணை தவறுகை.

தீர்வை நிரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப் படுதல் வேண்டும்.

21. இயைபான அதிகாரியானவர், இச்சட்டத்தின்கீழ் அறவிடப்பட்ட எல்லாத் தீர்வைகளையும் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கச் செய்வித்தல் வேண்டும்.

18ஆம் பிரிவின் கீழ் விதிக்கப் பட்ட தீர்வை யின் வலிது டைமை.

22. இச்சட்டத்தின்கீழ் புடைவைகள், புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பன மீது 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்குப் பின்னரும் இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரும் செலுத்தப்படற்பாலதான எல்லாந் தீர்வைகளும் இச்சட்டம் தொடங்கும் திகதிக்கு முன்பு பதிவுபெற்ற ஏற்றுமதியாளர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட்ட எல்லாந் தீர்வைகளும் எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியுள்ளவிதமாக அறவிடப்பட்டதாகக் கருதப்படுதலும் அத்துடன் அறவிடப்படுதலும் வேண்டும்.

நிலை மாறுகால ஏற்பாடுகள்.

23. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்து ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்றதும், இச்சட்டம் தொடங்கும் திகதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளர் ஒருவரால் ஏற்றுமதி செய்யப்பட்ட எவையேனும் புடைவைகள் அல்லது புடைவை உற்பத்திப் பொருட்கள், இச்சட்டத்தின்கீழ் ஏதேனும் தீர்வையைச் செலுத்துவதற்கு ஆளாகும் பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளரொருவர் இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அத்தீர்வையை, இயைபான அதிகாரிக்குச் செலுத்துதல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளரொருவர் அத்தகைய காலப்பகுதிக்குள்ளாக அத்தகைய தீர்வையைச் செலுத்தத் தவறுகின்றவிடத்து, புடைவைப் பங்குச் சபையானது அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஏற்றுமதியாளருக்கு வழங்கப்பட்டு அப்போதைக்கு வலுவிலிருக்கின்றதான ஏதேனும் புடைவைப் பங்குக் குறித்தொதுக்கலை நீக்கஞ் செய்யலாம்.

பொருள் கோடல்.

24. சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி, இச்சட்டத்தின் இந்த அத்தியாயத்தில் —

"இலங்கை முதலீட்டுச் சபை" என்பது, 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை என்று பொருளாகும்;

"பதிவுபெற்ற ஏற்றுமதியாளர்" என்பது, விடயத்திற்கேற்றுப் போன்று புடைவைக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுடன் அல்லது இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்தவரான புடைவை, புடைவை உற்பத்திப் பொருட்கள் என்பவற்றின் உற்பத்தியாளர் என்று பொருள்படும் ;

"இயைபான அதிகாரி" என்பது,

(அ) இலங்கை முதலீட்டுச் சபையுடன் பதிவுசெய்த ஏற்றுமதியாளர் தொடர்பில், இலங்கை முதலீட்டுச் சபையின் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்; அத்துடன்

(ஆ) புடைவைக் கைத்தொழில்கள் என்னும் விடயதிற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுடன் பதிவுசெய்த ஏற்றுமதியாளர் தொடர்பில் அத்தகைய அமைச்சின் செயலாளர் என்று பொருள்படும் ;

"புடைவை ஏற்றுமதிப் பங்கு" என்பது —

இலங்கை அரசாங்கத்திற்கும் வேறேதேனும் நாட்டின் அரசாங் கத்திற்கும் இடையிலான ஓர் உடன்படிக்கையின்கீழ் அல்லது அதற்கிணங்க குறித்துரைக்கப்பட்ட காலப்பகு தியொன்றின்போது குறித்துரைக்கப்பட்டவோர் அளவி லான புடைவைகளை அல்லது புடைவை உற்பத்திப் பொருட்களை இலங்கையிலிருந்து அந்த வேறு நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கான உரித்துடைமை ;

"புடைவை உற்பத்திப் பொருள்" என்பது, பின்வருவனவற்றுள் ஏதே னும் ஒன்றிலிருந்து அல்லது எல்லாவற்றிலுமிருந்தும் ஆக்கப் பட்ட ஓர் உற்பத்திப் பொருள் என்று பொருளாகும்.

பருத்தி. கம்பளி, மனிதவர்க்க நார், பட்டுக்கலந்த நார் அல் லது வேறு தாவர நார் ;

"புடைவைப் பங்குக் குறித்தொதுக்கல்" என்பது, வேறொரு நாட்டுக்கு ஏற்புடைத்தான புடைவை ஏற்றுமதிப் பங்கின்கீழ் குறித்து ரைக்கப்பட்டவொரு காலப்பகுதியின்போது, குறித்துரைக்கப் பட்ட அளவினதான புடைவைகளை அல்லது புடைவை உற்பத் திப் பொருட்களை, அந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு பதிவுபெற்ற ஏற்றுமதியாளர் ஒருவரை இயலச்செய்கின்றதான புடைவைப் பங்குச் சபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் அதிகாரவளிப்பு எனப் பொருளாகும் ;

"புடைவைப் பங்குச் சபை" என்பது, புடைவை ஏற்றுமதிப் பங்கை நிருவகிக்கவும் முகாமைசெய்யவுமென அமைச்சரால் நியமிக்கப் பட்ட புடைவைப் பங்குச் சபை என்று பொருளாவதுடன் அதன் உபகுழுவையும் உள்ளடக்கும்.

25. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

## முதலாவது அட்டவணை

(பிரிவு 3)

### ஆடம்பர மோட்டார் வாகனங்கள் மீதிலான அறவீட்டு வீதங்கள்

| ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|
| (1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதான) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்டதோ அந்த ஆண்டுக்கு .. | 50,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு, 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு | 45,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு, 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு | 40,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு, 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 35,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு, 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் நாலாவது ஆண்டுக்கு | 30,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு, 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு | 25,000 |
| (பதிவுசெய்யப்பட்டஆண்டு 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு | 20,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டிற்கு | இல்லை |

#### உதாரணம்

ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 1991 ஆகஸ்ட் 1 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டது. அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்திற்கு (பதிவுசெய்யப்பட்ட ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டான) 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டுக்குச் செலுத்தப்படற்பாலதான அறவீடு ரூ. 30,000/- ஆகும்.

ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 1995 ஆகஸ்ட் 1 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்டது. 1995 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று தொடங்கும் ஆண்டிற்கு அத்தகைய ஆடம்பர வாகனத்தின்மீது செலுத்தப்படற்பாலதான அறவீடு ரூ. 50,000/- ஆகும்.

ஆடம்பர மோட்டார் வாகனம் ஒன்று 1996 ஆகஸ்ட் 1 ஆம் திகதியன்று பதிவு செய்யப்பட்டது. (பதிவுசெய்யப்பட்ட ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டான) 1997 ஏப்ரில் 1 ஆம் திகதியன்று, அத்தகைய ஆடம்பர மோட்டார் வாகனத்தின்மீது செலுத்தப்படற்பாலதான அறவீடு ரூ. 45.000/-.

## இரண்டாம் அட்டவணை (பிரிவு 4)

### ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனங்கள் தவிர்ந்த ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனங்கள் மீதிலான அறவீட்டு வீதங்கள்

| ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|
| (1995 ஏப்றில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆண்டொன்றுன) எந்த ஆண்டில், அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செயயப்பட்டதோ அந்த ஆண்டுக்கு .. | 25,000 |
| (பதிவு செய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டுக்கு .. .. | 22,500 |
| (பதிவு செய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு .. .. | 20,000 |
| (பதிவ செய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றுவது ஆண்டுக்கு | 17,500 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 15,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவு செய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு .. .. .. .. | 12,500 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறுவது ஆண்டுக்கு .. .. .. .. | 10,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு 1995 ஏப்றில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் அத்தகைய ஓரளவு ஆடம்பர மோட்டார் வாகனம் பதிவுசெய்யப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு .. .. .. .. | இல்லை. |

## மூன்றும் அட்டவணை (பிரிவு 5)

### ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனங்கள் மீதிலான அறவீட்டு வீதங்கள்

| ஆண்டு | வீதம் ரூபா |
|---|---|
| 1995 ஏப்றில் 1 ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர் 1 ஆம் திகதியன்று தொடங்குகின்ற ஆண்டொன்றான) எந்த ஆண்டில், அத்தகைய ஓரளவு ஆடம்பர இரட்டைநோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டுக்கு .. | 10,000 |

| ஆண்டு | ரூபா |
| --- | --- |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் முதலாவது ஆண்டிற்கு | 9,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் இரண்டாவது ஆண்டுக்கு .. .. | 8,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் மூன்றாவது ஆண்டுக்கு | 7,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் நான்காவது ஆண்டுக்கு | 6,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஐந்தாவது ஆண்டுக்கு .. | 5,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஆறாவது ஆண்டுக்கு .. . | 4,000 |
| (பதிவுசெய்யப்பட்ட ஆண்டு ஏப்ரில் 1 ஆம் திகதிக்கு முன்னரோ அல்லது பின்னரோ தொடங்குகின்ற எந்த ஆண்டிலாயினுஞ்சரி) எந்த ஆண்டில் ஓரளவு ஆடம்பர இரட்டை நோக்க மோட்டார் வாகனம் பதியப்பட்டதோ அந்த ஆண்டை அடுத்துவரும் ஏழாவது ஆண்டுக்கு . | இல்லை |

## நான்காம் அட்டவணை

(பிரிவு 18)

### புடவை உற்பத்திப் பொருட்கள்மீதிலான தீர்வை வீதம்

| புடவை உற்பத்திப்பொருள் | வீதம் |
| --- | --- |
| உள்ளாடை அல்லாதனவான ஆடை வகை மற்றும் புடைவை. புடவை உற்பத்திப் பொருள்கள் என்பனவும் | டசின் ஒன்றுக்கு ரூ.12. |
| கையுறைகள் | 10 டசின் சோடிகளுக்கு ரூ. 12. |
| சதுரமீற்றர் அளவில் ஏற்றுமதிசெய்யப்படும் புடைவை மற்றும் புடைவை உற்பத்திப் பொருட்கள் | 10 சதுர மீற்றர் ஒன்றுக்கு ரூ. 3. |
| நிறைவாயிலாக ஏற்றுமதி செய்யப்படும் புடைவை மற்றும் புடைவை உற்பத்திப் பொருட்கள் | கிலோகிராம் ஒன்றுக்கு ரூ. 2. |
| துவாய்களும் தலையணை உறைகளும் .. | ஒவ்வொரு நூறு துண்டுகளுக்கும் ரூ. 12. |
| உள்ளாடை .. .. | ஒவ்வோர் ஐந்து டசின்களுக்கு ரூ. 12 |

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,387' (வெளிநாட்டு) ரூபா 1,849' ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.